வியாழக்கிழமை, 11 ஆகஸ்ட், 2011

# 'இலக்கியமும், வரலாறும் இணைந்து செயல்பட வேண்டும்'



கருத்துப்பட்டறையில் பேசுகிறார் பேராசிரியர் கே.என். பணிக்கர்.

**புதுச்சேரி, ஆக. 10:** ஒரு மொழியில் இலக்கியமும், வரலாறும் இணைந்து செயல்பட வேண்டும் என்று வரலாற்று பேராசிரியர் கே.என். பணிக்கர் இரு துறையினருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், தமிழ்நாடு- புதுச்சேரி முற்போக்குஎழுத்தாளர்மற்றும் கலைஞர்கள் சங்கம் சார்பில் தமிழ்ச் சூழலில் வரலாற்றுக்கும் இலக்கியத்துக்கும் இடையேயான உறவுகள் குறித்த 3 நாள் பயிலரங்கு பிரெஞ்சு ஆய்வு நிறுவன கருத்தரங்க கூடத்தில் புதன்கிழமை தொடங்கியது.

இதில் கேரளாவைச் சேர்ந்த வரலாற்று பேராசிரியர் கே.என். பணிக்கர் கலந்துகொண்டு சமூக மாற்றத்தின் வரலாறே இலக்கியம் என்ற தலைப்பில் பேசியது: வரலாறு மற்றும் இலக்கியம் என்பவை ஓரிழையில் கோர்க்கப்பட்டவை. இரண்டுக்குமே சமூகம் தான் அடிப்படை. ஒரு வகையில் இலக்கியமும், வரலாறும் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குபவை. வரலாற்றை விட்டு விலகிய இலக்கியமும், இலக்கியத்தை விட்டு விலகிய வரலாறும் தன் தனித்தன்மையை இழக்கிறது.

வரலாற்று ஆய்வாளர்களுக்கு இலக்கியம் மிக முக்கியமானது. அதேபோல் இலக்கிய ஆசிரியர்களுக்கு வரலாற்றுப் பதிவுகள் முக்கியமானதாக உள்ளது. எனவே வரலாற்று ஆய்வாளர்களும், இலக்கியவாதிகளும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே வரலாற்றியல் மற்றும் இலக்கியச் சூழல் சிறப்பாக இருக்கும் என்றார். இப்பயிலரங்கில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்க தலைவர் அருணன், பொதுச் செயலர் ச. தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.